பகுதிகளில் பஸ்கள் நம்முடைய எல்லையில் நிற்கின்றன. இவைகளை யெல்லாம் ஓட்டுவதற்கு, புதுப்பிக்கும் முயற்சியுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரு மாநிலங்களுக்கு மிடையே ஒப்பந்தம் ஏற்பட்டாலும்கூட, மாநிலங்களுக்கு இடையே ஓடும் வழித்தடங்கள் தனியார்களினாலும் பயன்படுத்தப்படுகின்றன. நம்முடைய சில வழித்தடங்களில் அத்தகைய தனி பஸ்கள் உரிமை யாளர்கள் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கியிருக்கின்ற காரணத் தினால் சில வழித்தடங்களிலே நமது பஸ்கள் விடமுடியவில்லை. இதை ஒட்டித்தான் அண்மையில் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சர்கள் மகாநாட்டில் மாநிலங்களுக்கு இடையே ஓடுகின்ற பேருந்துகளின் வழித்தடங்கள் அத்தனையையும் நமது போக்கு வரத்துக் கழகங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான்கு தென் மாநில அமைச்சர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தமிழ் நாட்டு அரசிற்கும் கேரள சர்க்காருக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடந்து புதிய ரூட்கள் திறக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? ஏற்கனவே கோட்டையம் போகிற பஸ்களை எர்ணாகுளத்திற்கு நீடிப்ப தற்கு ஏற்பாடாகியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கனவே தமிழகத் திற்கும் கேரளத்திற்கும் இருந்த உடன்படிக்கையின்படி ஒவ்வொரு வழித்தடத்தைப்பற்றி அவர்களிடையே பேசி அதற்குப் பிறகு விட வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. அண்மையில் பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு மாநிலத்திலிருந்து இதர மாநிலத்தில் பேருந்துகள் எவ்வளவு தூரம் ஓடுகிறது என்ற அடிப்படையில். அந்தப் பகுதியிலே ஓடுகிற தூரத்தை சமநிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தத்துவத்தை கேரள அரசு ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். வழித்தடங்களை நாம் அதிகப்படுத்துவதில் எந்த விதமான சிக்கலும் இருப்பதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் கவனத்தில் கொள்ளும்.

Road Development and Traffic Planning Committee

* 140 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Road Development and Traffic Planning Committee, is working in collaboration

1973 பிப்ரவரி 12]

with (1) Road Safety Organisation and (2) Traffic Cell of the Highways and Police Departments; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) நெடுஞ்சாலை, காவல்துறைகளின் அதிகாரிகள் தமிழ்நாடு மாநில சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக்குழுவின் உறுப்பினர்களாக உள்ளதாலும் இக்குழுவின் பரிவுரைகள் இவர்களால் செயல்படுத்தப் படுவதாலும், நெடுஞ்சாலை–காவல்துறைகளுடன் இக்குழு ஒருங்கிணைந்து செயல்படுகிறது எனக் கொள்ளலாம்.

THIRU N. DENNIS: May I know the place having greater number of accidents?

THE HON. THIRU S. RAMACHANDRAN: I have no information, Sir.

MR. DEPUTY SPEAKER: Questions and answers are over.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(2) ஒற்றிவைப்புத் தீர்மானம்

மதுரை, எர்ஸ்கின் மருத்துவமனை ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார் அவர்களும், கே. டி. கே. தங்கமணி அவர்களும் பேரவையின் 42-வது விதியின் கீழ் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது—

" Failure of the Government to settle Madurai Erskine Hospital House Surgeons' strike earlier than 30th January 1973 resulting in four days strike by House Surgeons and students and sympathetic strike and threat by the Class IV staff ".

இது எப்படி பேரவையின் நிகழ்ச்சிகளை ஒற்றி வைக்கக்கூடிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் திரு. தங்கமணி அவர்களும் சுருக்கமாக விளக்குவார்கள். முதலில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்.